இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 08 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 01 – செவ்வாய்க்கிழமை 18 ஆகஸ்ட் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 08 : Thiruvalluvar Year - 2057 - Aavani 01 - Tuesday 18 August 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00







சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற வடக்கு மண்டல கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பங்கேற்ற கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் காட்சி!

## கழகத்துக்கு நெருக்கடி வந்த போதெல்லாம் அதை உடைத்து தூள்தூளாக்கியது கழக சட்டத்துறைதான்!

# பாசிச த.வெ.க. அரசிடமிருந்து கழகத்தினரையும் - மக்களையும் பாதுகாப்போம்!

## வடக்கு மண்டல கழக வழக்கறிஞர் அணிக் கூட்டத்தில் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, ஆக. 18-**

**வடக்கு மண்டல கழக வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது, "பாசிச த.வெ.க. அரசிடமிருந்து கழகத்தினரையும் - மக்களையும் பாதுகாப்போம்!" என்று வேண்டுகோள் விடுத்தார்.**

சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் தி.மு.கழக சட்டத்துறை சார்பில், வடக்கு மண்டல வழக்கறிஞர்கள் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய எழுச்சிமிக்க உரையின் விவரம் வருமாறு :-

இங்கே பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதற்கு முதலில், வழக்கறிஞர் அணிக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் பலமுறை சந்தித்திருக்கிறோம்.

தனியாகவோ அல்லது அணியின் சார்பாகவோ பலமுறை சந்தித்திருக்கிறோம். குறிப்பாக, சென்ற தேர்தலுக்கு முன்பு பல மாவட்டங்களுக்கு நான் வரும்பொழுது அங்கு இருக்கக்கூடிய அனைத்து சார்பு அணிகளையும் ஒரே இடத்தில் சந்தித்து, நாமெல்லாம் உரையாடி இருக்கிறோம். ஆனால்,



இன்றைக்கு ஒரு வித்தியாசமான சூழலில், வேறொரு மாறுபட்ட சூழ்நிலையில் நாம் சந்திக்கின்றோம்.

### தனித்துவம் வாய்ந்தது

கழகத்தில் எத்தனையோ அணிகள் இருந்தாலும், சட்டத்துறை என்று அழைக்கப்படுவது இந்த அணி மட்டும்தான். பொதுவாக ஒரு அரசாங்கத்தில்தான் ஒவ்வொரு பிரிவையும் கவனிக்க `துறை' என்று தனித்தனியாகப் பிரித்துச் சொல்வார்கள். ஆனால், நம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டும்தான் ஒரு அணிக்கே `சட்டத்துறை' என்று பெயர் வைத்திருக்கிறோம் என்றால், அது நம் வழக்கறிஞர் அணிக்குத்தான்; சட்டத்துறைக்கு மட்டும்தான். இதிலிருந்தே கழகத்தினுடைய சட்டத்துறை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது, எத்தனை தனித்துவம் வாய்ந்தது என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ளலாம்.

இன்றைக்கு கழகத்தில் இளைஞர் அணி உள்ளிட்ட 25 அணிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இன்றைக்கு நம் கழகத்திலேயே `மோஸ்ட் வான்டட்' அணி என்றால், அது நம் சட்டத்துறைதான். தேர்தலுக்கு முன்பு அத்தனை அணிகளும் தேர்தல் வேலையைப் பார்த்தோம். ஆனால், இன்றைக்கு தேர்தல் முடிவு வந்தபிறகு ஒரு அணி, ஒரு துறை மிகவும் ஆக்டிவாக இருக்கிறது என்றால், அது இந்தச் சட்டத்துறைதான். தலைவருக்கு ஒன்று என்றால் மட்டுமல்ல, தலைமைக் கழகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு ஒன்று என்றால் மட்டுமல்ல; ஒரு கடைக்கோடி தொண்டனுக்கு ஒரு பிரச்சினை என்றாலும், முதலில் வந்து நிற்பது சட்டத்துறையைச் சேர்ந்த வழக்கறிஞர்களாகிய நீங்கள்தான்.

ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, கழகத்தின் மிகப்பெரிய பலம், மிக முக்கியமான முதுகெலும்பு, மிகப்பெரிய ஒரு எனர்ஜி என்றால், சட்டத்துறையைச் சேர்ந்த நிர்வாகிகளாகிய நீங்கள்தான்.

### இறந்த பிறகும் ஒரு போராட்டம்

குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞருடைய கடைசி ஆசை, 2018ஆம் ஆண்டு கலைஞரின் மறைவிற்குப் பிறகு மெரினாவில் அண்ணாவுக்கு பிறகு தன்னுடைய ஓய்வு இருக்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார். அப்பொழுது இருந்த எடப்பாடி பழனிசாமியின் அரசு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு அதைத் தடுக்கப் பார்த்தது. அதற்கான அனுமதியைக் கொடுக்கவில்லை. கலைஞரின் கனவைச் சட்டப்போராட்டம் நடத்தி, அதை நிறைவேற்றியது இங்கே வந்திருக்கக் கூடிய சட்டத்துறையைச் சேர்ந்த நீங்கள்தான். இன்றைக்கும் கலைஞரைப் பற்றி நாம் பெருமையாகப் பேசுகிறோம். தான் இறந்த பிறகும் ஒரு போராட்டம் நடத்தி, அதில் ஜெயித்த ஒரே தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்றால், அந்தப் போராட்டத்தின் வெற்றிக்குக் காரணம் இங்கே வந்திருக்கக்கூடிய வழக்கறிஞர்களாகிய நீங்கள்தான்.

கழகத்தின் வரலாற்றில் நீங்கள் போராடிப் பெற்றுக் கொடுத்த தீர்ப்புகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு சட்ட மாணவனும் படிக்க வேண்டிய ஒரு ஆய்வுப் படிப்புகளின் ஆய்வறிக்கைக்கு சமமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தில் வாதாடி, போராடிப் பெற்றுக் கொடுத்த தீர்ப்புகள் ஒரு பக்கம் இருந்தாலும், தேர்தல் காலங்களில் 'வார் ரூம்' அமைத்து நீங்கள் செய்த தேர்தல் பணிகள், யாராலும் அளவிட முடியாதவை. குறிப்பாக, இந்தத் தேர்தலுக்கு முன்பும் நீங்கள் அத்தனை பேரும் வார் ரூமில் தேர்தல் பணியாற்றி இருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு நாம் எதிர்பாராத ஒரு தேர்தல் முடிவு வந்திருக்கிறது. நாம் மட்டுமல்ல, தமிழ்நாடே எதிர்பாராத ஒரு தேர்தல் முடிவு வந்தது. தமிழ்நாடு மட்டுமல்ல, இன்றைக்கு ஆட்சியில் அமர்ந்திருக்கக்கூடிய அந்த `சர்க்கஸ்' கூட்டமே எதிர்பாராத ஒரு தேர்தல் முடிவை இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் கொடுத்திருக்கிறார்கள்; அதை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். இன்றைக்கு இந்த `சர்க்கஸ் கும்பல்' ஆட்சிக்கு வந்த பிறகு, மற்ற அணிகளின் பணிகளை விட, மற்ற அணிகளின் தேவையை விட, இன்றைக்கு வழக்கறிஞர்களின் பணி மிக மிக அவசியமாக, முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

### பாதுகாப்பின்மை உணர்வு

கடந்த 100 நாட்களில் யார் மிகவும் பிஸியாக இருக்கிறார்கள் என்று பார்த்தீர்கள் என்றால், வழக்கறிஞர்களாகிய நீங்கள்தான் மிகவும் பிஸியாக இருக்கிறீர்கள். ஏன் பிஸியாக இருக்கிறீர்கள் என்று உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். நின்றால் கைது, நடந்தால் கைது, பேசினால் கைது, சமூக வலைதளத்தில் ஒரு பதிவு போட்டால் கைது என்று, ஒரு மோசமான பாசிச அரசாக இன்றைக்கு இந்த அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. அந்த அளவுக்கு இந்த அரசுக்குப் பாதுகாப்பின்மை உணர்வு (இன்செக்யூரிட்டி) ரொம்பவும் அதிகமாக இருக்கிறது..

தூங்கி எழுந்தால் இன்றைக்கு யாரைக் கைது செய்யலாம் என்று, கிட்டத்தட்ட ஒரு கால அட்டவணை போட்டு, திட்டம் போட்டு, இந்த அரசு கைது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்


### முரசொலிமாறன் 93வது பிறந்தநாள் – 'முரசொலி' வளாக முகப்பிலுள்ள

## முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்கு தலைவர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, ஆக. 18 -



முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கியவரும் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாகச் செயல்பட்டவரும் - ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்த நாளினை முன்னிட்டு நேற்று (17.8.2026 திங்கட்கிழமை) காலை 9.30 மணியளவில் கோடம்பாக்கம், 'முரசொலி' அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மேலும் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், துறைமுகம் காஜா, மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், நே.சிற்றரசு, கழக சட்டத் துறை இணைச் செயலாளர்கள் இ.பரந்தாமன், கே.எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக முன்னணியினர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிலையில் ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலா ளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

